ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# ॥ சினவில் ॥


*This document* has been prepared by*

**Sunder Kidambi**

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***


---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சினவில் ॥

## திருநறையூர் - 10

‡சினவில் செங்கண் அரக்கர் உயிர் மாளச்⋆
 செற்ற வில்லியென்று கற்றவர் தந்தம்
மனமுள் கொண்டு⋆ என்றும் எப்போதும் நின்றேத்தும்
 மா முனியை⋆ மரமேழ் எய்த மைந்தனை⋆
நனவில் சென்றார்க்கும் நண்ணற்கரியானை⋆
 நான் அடியேன் நறையூர் நின்ற நம்பியை⋆
கனவில் கண்டேன் இன்று கண்டமையால்⋆ என்
 கண்ணிணைகள் களிப்பக் களித்தேனே (1)

தாய் நினைந்த கன்றேயொக்க⋆ என்னையும்
 தன்னையே நினைக்கச் செய்து⋆ தான் எனக்-
காய் நினைந்தருள் செய்யும் அப்பனை⋆
 அன்றிவ் வையகம் உண்டுமிழ்ந்திட்ட
வாயனை⋆ மகரக் குழைக் காதனை⋆
 மைந்தனை மதிள் கோவல் இடைகழி
ஆயனை⋆ அமரர்க்கரியேற்றை⋆ என்
 அன்பனை அன்றி ஆதரியேனே (2)

வந்த நாள் வந்தென் நெஞ்சிடம் கொண்டான்⋆
 மற்றோர் நெஞ்சறியான்⋆ அடியேனுடைச்
சிந்தையாய் வந்து⋆ தென்புலர்க்கென்னைச்
 சேர்கொடான் இது சிக்கெனப் பெற்றேன்⋆
கொந்துலாம் பொழில் சூழ் குடந்தைத் தலைக்
 கோவினைக்⋆ குடம் ஆடிய கூத்தனை⋆
எந்தையை எந்தை தந்தை தம்மானை⋆
 எம்பிரானை எத்தால் மறக்கேனே (3)

உரங்களால் இயன்ற மன்னர் மாளப்⋆
பாரதத்தொரு தேர் ஐவர்க்காய்ச் சென்று⋆
இரங்கி ஊர்ந்தவர்க்கின்னருள் செய்யும்
எம்பிரானை⋆ வம்பார் புனல் காவிரி⋆
அரங்கம் ஆளி என்னாளி விண்ணாளி⋆
ஆழி சூழ் இலங்கை மலங்கச் சென்று⋆
சரங்கள் ஆண்ட தண் தாமரைக் கண்ணனுக்-
கன்றி⋆ என் மனம் தாழ்ந்து நில்லாதே (4)

ஆங்கு வெந்நரகத்தழுந்தும் போது⋆
அஞ்சேல் என்றடியேனை அங்கே வந்து
தாங்கு⋆ தாமரை அன்ன பொன்னார் அடி
எம்பிரானை⋆ உம்பர்க்கணியாய் நின்ற⋆
வேங்கடத்தரியைப் பரி கீறியை⋆
வெண்ணெய் உண்டுரலினிடை ஆப்புண்ட
தீங்கரும்பினை⋆ தேனை நன் பாலினை
அன்றி⋆ என் மனம் சிந்தை செய்யாதே (5)

எட்டனைப் பொழுதாகிலும்⋆ என்றும்
என் மனத்தகலாதிருக்கும் புகழ்⋆
தட்டலர்த்த பொன்னை அலர் கோங்கின்⋆
தாழ் பொழில் திருமாலிருஞ்சோலை அங்-
கட்டியை⋆ கரும்பீன்ற இன் சாற்றைக்⋆
காதலால் மறை நான்கும் முன்னோதிய
பட்டனை⋆ பரவைத் துயில் ஏற்றை⋆ என்
பண்பனையன்றிப் பாடல் செய்யேனே (6)

பண்ணின் இன் மொழியாம் நரம்பில் பெற்ற⋆
பாலையாகி இங்கே புகுந்து⋆ என்
கண்ணும் நெஞ்சும் வாயும் இடம் கொண்டான்⋆
கொண்ட பின் மறையோர் மனம் தன்னுள்⋆
விண்ணுளார் பெருமானை எம்மானை⋆
வீங்கு நீர் மகரம் திளைக்கும் கடல்

வண்ணன்⋆ மா மணி வண்ணண் எம் அண்ணல்⋆
வண்ணமே அன்றி வாய் உரையாதே (7)

இனி எப்பாவம் வந்தெய்தும் சொல்லீர்⋆ எமக்-
கிம்மையே அருள் பெற்றமையால்⋆ அடும்
துனியைத் தீர்த்தின்பமே தருகின்றதோர்⋆
தோற்றத் தொன்னெறியை⋆ வையம் தொழப்படும்
முனியை வானவரால் வணங்கப்படும்
முத்தினைப்⋆ பத்தர் தாம் நுகர்கின்றதோர்
கனியை⋆ காதல் செய்தென்னுள்ளம் கொண்ட
கள்வனை⋆ இன்று கண்டு கொண்டேனே (8)

என் செய்கேன் அடியேன் உரையீர் இதற்-
கென்றும்⋆ என் மனத்தே இருக்கும் புகழ்⋆
தஞ்சை ஆளியைப் பொன் பெயரோன்⋆ தன் நெஞ்சம்
அன்றிடந்தவனைத் தழலே புரை⋆
மின் செய் வாள் அரக்கன் நகர் பாழ் பட⋆
சூழ் கடல் சிறை வைத்திமையோர் தொழும்⋆
பொன் செய்மால் வரையை மணிக் குன்றினை
அன்றி⋆ என் மனம் போற்றி என்னாதே (9)

‡தோடு விண்டலர் பூம் பொழில் மங்கையர்⋆
தோன்றல் வாள் கலியன் திருவாலி
நாடன்⋆ நன்னறையூர் நின்ற நம்பி தன்⋆
நல்ல மாமலர் சேவடி சென்னியில்⋆
சூடியும் தொழுதும் எழுந்தாடியும்⋆
தொண்டர்கட்கவன் சொன்ன சொல் மாலை⋆
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர்!
பாட⋆ நும்மிடைப் பாவம் நில்லாவே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥